உ

வேலுமயிலுக்துணே.

அற்புதநூதன

# காவடிச்சிந்து.

குட்டுலொட்டி கிராமம்

மகா-ள-ள-ஸ்ரீ குப்பாத்தேவரவர்கள் குமாரர்

வடக்கம்பட்டி போர்டுஸ்கூல் ஹெட்மாஸ்டர்

சின்னத்தம்பி என்ற

குப்பாத்தேவரவர்கள்

இயற்றியது.

---

இ. ராமசாமிக்கோன்,

பிரிண்டர் & பப்ளிஷர்

வடக்குச்சித்திரை வீதி, மதுரை.

---

Registered Copy Right.

1930. [அணு 2.

...ல்வியர் பிரஸ், மதுரை.

Q26:417
M30
186233

மதுரைத் தமிழ்வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ

நா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களியற்ற

# பதிவிரதா பராக்ரமம் அல்லது

# சாவித்ரி சத்யவான் சரித்திரம்.

நண்பர்களே! கவனியுங்கள்!! கவனியுங்கள்!!

நமது தமிழ் வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் இயற்றிய "நல்லதங்காள் சரித்திரத்திலுள்ள பாடல்களைப்படித்த கன வான்கள் அவர் பாடல்களையே படிப்பதற்குப் பிரியங்கொண்டு வாயூறாத வர்கள் இல்லை" என்பது யாவருமறிந்த விஷயமல்லவா?

ஷை நாயுடவர்களியற்றிய இந்தச் சாவித்ரி சத்யவான் சரித்திரத்தில் கலிங்க தேசத்தரசன் ராஜ தர்பாரில் தேசவிசாரணை செய்யும் ஆடம்பர மான பாடல்களும் சால்வபுரியரசனுடன் போர்புரிந்து நாட்டைக் கைப் பற்றும் வீராவேசமான பாடல்களும், வசனங்களும் ராஜ தந்திர முறைப் படியும், மிக்கஆக்ரமரோஷ விதிப்படியும் இருக்கும்.

சாவித்திரி தன் சகிமார்களுடன் நந்தவனத்திலுலாவும் காட்சியமைந்த பாடல்களும், சிம்மத்தால் துரத்தப்பட்ட சாவித்ரி, சத்தியவானால் ஆதரிக் கப்பட்ட சமயத்தும், இருவர்க்கும் ஏற்படும் காதல் கலப்பின் சமயத்தும் உள்ள பாடல்களும் தர்க்க வசனங்களும் வெகு சிருங்காரமா யிருக்கும்.

எமராஜன் தர்பாரில் எமபடர்களிடத்தில் அகப்பட்டுத் திண்டாட்டப் படும் சண்டாளன் ஒருவன் தான் செய்த தீயசெய்கைகளைச் சொல்லிப் புலம்புதல் படிக்கப்படிக்கக் கொண்டாட்டமாயிருக்கும். இப்பாடல்களைப் படித்தோர்களும், கேட்டோர்களும் எத்தகையினராயினும் அவர் தீயவழி களில் மனதைச் செலுத்த மாட்டார்களென்பது திண்ணம்.

சத்தியவான் உயிர் நீங்கும் சமயம் இருவர்க்கும் பிரிவாற்றாமையால் ஏற்படும் சோகரசமான பாடல்களைப்படித்தோர் கல்மனதுடையவராயி னும் அங்கு கலங்காதிருக்க முடியாதென்பதில் ஐயமில்லை.

பதிவிரதாசிரோன்மணியாகிய சாவித்ரி தன் விரதமகிமையால் எமனு டன்பின்தொடருஞ்சமயம் இருவர்க்கும் ஏற்படும் தர்க்கமும், கணவனின் உயிர்மீட்கும் பாடல்களும், வசனங்களும் படிக்கப்படிக்க உருக்கமும் இன்பமுமாயிருக்கும். இங்கு தம்பதிகளின் அன்பின்தகைமை வெளிப்படும்

இச்சரித்திரத்திற்கென அமைந்த தமிழருமையான வசனசாதுர்யங் கள்வாசிக்கத்தகுந்தது. இன்னிசையமைந்த பாடல்கள் படிக்கத்தகுந்தது. இடத்திற்குத் தக்கவாறு அமைந்த புதிய வர்ணமெட்டுகள் கேட்கத் தகுந்தது. சொற்பக் காப்பிகளே தயார். 1-2 பாகங்கள் விலை அணா—8

| | | | |
|---|---|---|---|
| ,, | நல்லதங்காள் சரித்திரம் 1, 2 பாகம் தனித்தனி | ,, | 0—4—0 |
| ,, | இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து | ,, | 0—2—0 |
| ,, | ஷை காந்தி தியானம் சிங்காரப்பாட்டுகளுடன் | ,, | 0—1—0 |
| ,, | ஞானசவுந்தரி சரித்திரம் 1, 2 பாகம் தனித்தனி | ,, | 0—4—0 |
| ,, | சகுந்தலாசரித்திரம் 1, 2 பாகம் ,, | ,, | 0—4—0 |

ஸ்ரீசிவ சுப்பிரமணியக் கடவுள்பேரில்

# அற்புத நூதனக்

# காவடிச் சிந்து.

---

விநாயகர் துதி—விருத்தம்.

அரியயனுந் திசைமுகனும் அன்பர் என்றும்
அகமகிழக் குருமுனிசென் றடிகள்போற்றத்
திரிபுரமும் புவிமுழுதுங் கருணை யோங்கத்
தேவர்களுஞ் சித்தர்களுந் துதிகொண்டாடத்
திருவருளுங் கைலைநகர் பதியில்மேவுஞ்
சிவனுமையாளருள் சுதனும் வடிவேற்கந்தன்
சரிதமதின் திருவருளைத் தினமும் பாடத்
தந்திமுகக் கணபதிபொற் றாள்காப்பாமே

தோத்திரச் சிந்து.

என்னடி நான்பெற்ற மங்கை என்ற மெட்டு.

அத்திமுக கணநாதா திருப்பாதா செல்வநீதா ஜெக
ஐம்புவியெங்குஞ் சமேதா தேவ
அரனேமோன பரனேஐந்து கரனேவருட்டிரனேவொளி
ராறுமுகன் பதம்பாட-வரந் தாருந்திருவருள் கூட

சத்தி கௌரி ஓய்யாரி ரணவீரி மகாமாரி இந்தத்
தாரணியிலுப காரி அண்டர்
சயிலந்தொழ மயிலேறிடு மெயிலாகிய வடிவேலவர்
தாளைப்பணிந்திட நீயே-வரந் தந்தரு ளென்னிடந்தாயே

தென்பரங் குன்றுறை வாசா பிரகாசா தொண்டர்நேசா சின்னத்
தம்பிக்கருள் தாசர் வேசா பாதந்
தேடித்திரி கின்றேனுனை நாடித்துதி செய்தேன்கனி
தேவாதிதேவாமுருகேசா-நல்லசேவையருளும் பரமேசா

இன்பசுகந் தருவாயே கெதி நீயே உமைசேயே எனக்
கேற்றவரமருள் வாயே கந்தா
இனிதாகிய வரமேதர வருவாயுன தடியார்துய
ரெப்படியாகிலுந் தீரும்-நானே ஏழை எனைக்கண்ணுற்பாரும்

தஞ்சமென்றே யுனைநாடிச் சிந்துபாடி மலைதேடி வந்து
சஞ்சலந் தீர்ந்தார்பல கோடி எந்தன்
சடலந்தனி லடுநோயெது மணுகாமலே படிமீதிலே
சத்தியுமையவள் பாலா-நல்ல வெற்றியெனக்கருள் வேலா

அஞ்சலென்றோடிவந்தாலும் எந்நாளும் என்னையாளும் விசும்
பண்டர்துதித்திட வாழும் வள்ளிக்
கருகாதிரு மருகாகிரி முருகாவுன தடியார்களை
ஆதரிக்குங்குரு பரனே-உமை யாள்சுதா வீராறு கரனே

நாற்றிசை யாருனைத்தேடி வந்துகூடிப் புனலாடிப் பல
நங்கையராடவர் பாடி வரும்
நருளானது திரள்சேரிட வருமாமலை வலமாகிய
நல்லசங்கிதங்கள்தோடி ராகஞ் சொல்லித்துதிப்பவர் கோடி

போற்று மமரர்கோமானே ஏழைநானே உனைத்தானே • பாடக்
கீர்த்தியருளுஞ் சீமானே வேலா
பொற்பதனேவடிவேல்முரு கப்பாவுனை எப்போதுமே
போற்றிப்பணிந்திடு வேனே காப்பாற்றுமெனை முருகோனே

---

சத்தியருள்பாலா என்ற வர்ண மெட்டு.

கன்னல்மொழியுமையா ளீன்றருள் கந்தனையே துதிக்க
சென்னல்நகர்வாழும் விநாயகர் சேவடிபோற்றுவனே
காரிகைநன்னூலு மிலக்கணங் கற்ற கவியோரே
பாரில் வேலாயுதன்மே லனுதினம் பாடிமகிழ்வீரே
அன்னரதிக் குயிலே குட்டுலொட்டி அழகிய நல்லூராம்
சின்னத்தம்பிதாஸன் சுப்பிரமணியர் சேவடிபோற்றுகிறேன்
தேசத்திலுள்ளோர்கள் கந்தன்வாழ் திருப்பரங்குன்றினுக்கு
ஆசையுடன் நடந்து வருகுவதை அன்னமே நீ பாராய்
தூற்றுக்குடியிருந்து வருகுது தொண்ணூறு காவடிகள்
நாற்றிசையோர்களுமே பரங்குன்றம் நாளைக்குத்தான்வருவார்

எங்கினுமுள்ளோர்கள் செந்தூ ரெட்டியாபுரத்திருந்தும்
தங்கக்காவடி கொண்டு இந்தவழி தான்வரு வார்மயிலே
மைக்குழல் மாதரசே மான்தோப்பு மருதங்குடி திருமால்
கொக்குளத்தா றுதாண்டிக் கூடல்கோயில் கொம்பாடியுங்கடந்து
பலகார ஊரணியாம் அருகே பரங்குன்றச் சோலைகளாம்
உலகப்பிரகாசம் சுப்ரமண்ய ருன்னத மாமலையும்
மாமயில் வாகனண்டி சுப்பையா மாயன் மருகனடி
காமன்றனை யெரித்த ஈசர்பெற்ற கந்தனைக் காணவென்றே
பொற்றாமரையழகும் கழனியும் பூங்காவுஞ் சோலைகளும்
கஸ்தூரி வாசனையு மருவுங் கமகமென்றே மணக்கும்
சாலைவழி போனால் பரங்குன்றந் தானிரு காதமடி
கால்நடையாகவேபோய் வடநகர் கண்டுபுறப்படுவோம்
கன்னியே நீவாராய் மேலப்பட்டி காணும் வடமேற்கில்
உன்னிப்பட்டி தனிலே மயில்களு லாவுது சோலையிலே
சோலைக்கிளி யழகி கள்ளிக்குடிச் சாலையும் தோன்றுதுபார்
பாலகிருஷ்ண புரமாம் வடநகர் பட்டணந் தானிதுகேள்
நேராத்துணையிருந்து அடியாரை நித்தமுங் காக்குந்துரை
பாராச்சடா முனிவன் திருவடி பாதம் பணிந்திடுவோம்
ஊருக்கு நேர்வடக்கே சிவஸ்தல மொன்றுமலைப் பெருமாள்
கோரிய முத்திதரும் ராமர்மலைக் கோவிலுந் தான்கடந்து
ஆறுதெரிகுதுபார் சிவகோட்டை ஊருக் கருகினிலே
மாரியம்மாள் சங்கிலி சீர்பாதம் வணங்கியே சென்றிடுவோம்
மருப்படாமயிலே சாலையெங்கும் வாங்கலாம் வெள்ளரிக்காய்
மருதப்பநாயக்கன் பிள்ளையார் சமீபம் மங்கையே தூரமில்லை
திருமங்கலம் பாராய் விசாரணை செய்யுங்கச் சேரிகளும்
சரிகைத் தலைப்பாவுடன் உத்தியோகஸ்தர் சாரட்டும்போகுதுபார்
கப்பலூர் தான்கடந்து கூத்தியார்குண்டுக் கண்மாய்வழிகூடி
சுப்பையா வாழ்மலையைச் சுற்றியுள்ள தோப்பு வழிகடந்து
மந்திர வேதங்களும் சுப்பையா மலையடி வாரமெங்கும்
சந்தனப் பூமருவுஞ் சாம்ராணி சவ்வாதுங் கமகமென்ன
பூமலர்தான் ஜொலிக்கும் சரவணப் பொய்கையில் நீராடி
மாமலைசுற்றிவந்தால் சகலர்க்கும் மாதவந்தான் கிடைக்கும்

நித்யந்துதிப்பவர்க்கு அறுமுகன் நெஞ்சிற் குடியிருப்பான்
பக்தியுடனடந்தால் குமரன் பாலகரைத் தருவான்
சஞ்சலந்தீர்த்திடுவான் குமரன் சகலவினை யறுப்பான்
தஞ்ச மடைந்தவர்க்கு வேலவன் சார்ந்த வரமளிப்பான்
என்றைக்குமே குழந்தைக் குமரனென் றெல்லோருங்கொண்டாட
குன்றைத் துளைத்திருக்கும் குமரர் குருபர தேசிகரே
சபிலமெல்லாம் பணியும் ஞானத போதனர்கள் துதிக்க
கயிலையென வளரும் பரங்கிரிக் கந்தனே நீ துணையே
சன்னதிக்கோபுரத்தில் வாழுமுயர் சார்ந்த சடாமுனியே
முன்னிலையாகநின்ற கருப்பண மூர்த்தியே நீ துணையே
தேரடிகாத்திருக்கும் ரணபூத தெய்வங்களே நீங்கள்
காரணவேலவர்க்குத் தெரியக் கனிந்துரை செய்வீரே
தஞ்சமென்றேனுனையே எனதிடர் சஞ்சலந்தானகற்ற
அஞ்சலென் றேவருவாய் பரங்கிரி யாளுங் குருபரனே
குற்ற மிருந்தாலும் பிரார்த்தனை கோரிமறந்தாலும்
உற்றதை நீபொறுத்து இப்போதுவந் துதவும் பரங்குன்றனே
சித்தமிரங்கலையோ என்றன்கலி தீர்க்க வருகலையோ
சத்தியருள்குமரா மயில்மிசை தாவுந் தண்டாயுதனே
வஞ்சனை சூனியங்கள் தலையிடி வாதசுர மெதுவும்
நஞ்சுவிஷமெதிரில் வராமலென் நாளுந் துணையிருப்பாய்

---

வானவர் புகழும் காசி என்ற மெட்டு.

திருபரங் கிரியைநாமும் விருப்பமாகவே நினைத்தால்
பொருப்பது மிகத்துலங்கும் பாரடி வேலன்
மருப்படாமல் காப்பரென்று தேடி அங்கே

தேவருலகமுலாவிவருமயி லேறுமுககுகவா றுமுகவர்தன்
சேவடிதனை வணங்கு வோர்களே நல்ல
காவடிச்சிந் திசைபாடு வார்களே

தாழையுங் கமுகுதென்னை வாழையுங்கரும்பு சென்னல்
பாளைகள் நெருங்கியெங்குந் தாவுமே எந்த
வேளையுங் குயிலினங்கள் கூவுமே மலையில்

சந்தனம் புளி தேவதாரகி லந்தரத்திலு லாவிநின்றிடும்
சாமிகந்தன் வாழ்மலையைச் சுற்றியே வரத்
தாமிதமிலாதெவர்க்கும் வெற்றியே

எங்கினு முண்டானபேர்கள் பங்குனித் திருநாள்தோறும்
தங்கிடும்மடங்களிதோ பாரடி கோவில்
எங்கினுந் தொனிமுழக்கம் சீரடி இதுபோல்
எப்பிறப்பினு மெத்தலத்தினு மிப்பதிக்கிணை யொப்பிடாததென்
றேத்தியே பணிந்துபதம் பாடியே மலர்
சாத்தியே பணிவார்தேவர் கோடியே

மங்கையே இன்னமுங்கேளாய் பங்குனி யுத்திரந்தனி
லெங்கினுங்காவடிகள் கொண் டாடவே தேவ
மங்கையராலாத்திகொண்டு தேடவே கந்தன்
மலையுமுலகொளி திலதநிகரென மனதிலடியவர் தினமும்பணிமகிழ்
வாகியே சோமவாரங்கள் தோறுமே திரண்
டேகியே வணங்குவதைப் பாருமே

கன்னியே கோபுரவாசல் தன்னிலுங் கோடானகோடி
கைத்தாளஞ் சேகண்டி சங்கு நாதமே தித்தி
மத்தள மேளங்களும் வி ஞேதமே கோவில்
காரணந்திடு மாடமாளிகை தோறுமாமதி சூழுலாவிய
கைலயங்கிரிக்கு நிக ராகுமே அண்ட
சயிலமும் தென்பரங்குன்ற மாகுமே

அத்தருஞ் சவ்வாது பன்னீர் வெட்டிவேர் சிவந்தி முல்லை
ஆறுமுகர்க்கென் றுபுவி யோர்களே செய்பா
லஞ்சலென் றுகொண்டு வரு வார்களே ரோஜா
அருமையாகிய மருவு மல்லிகை அரளிபிச்சி மருக்கொழுந்துடன்
ஆலயங்கற்பூரவொளி வீசுமே வீச
மண்டமுகடுங் கடந்தவ் வாசமே

சன்னதி தனிற்கோபுர மின்னொளி ப்ரகாசமாகிப்
பொன்னகருலாவி நிற்கும் சேதியே தேவர்
தன்னுறப்பாடுவர்வேலன் கியாதியே கந்தன்
சகலவல்லவ னறுமுகன்குக னிகல்தொடுத்தசு ரரைவதைத்திடு
சண்முகன் பெருமை என்ன சொல்லுவோம் அவர்
தன்னடிவணங்க நாமும் செல்லுவோம்

வள்ளிதெய்வானை மணாளன் புள்ளி மயிலேறும் வேலன்
வெள்ளிமலை ஈசன் பெற்ற பாலனும் கையில்
தெள்ளியே விபூதியேந்துஞ் சீலனும் கந்தன்

வாதுகூறிய சூரனைச்சம ராடிவென்றுந லந்தருங்குகன்
வந்தனையகற்றும் வடி வேலனும் தொண்டர்
சிந்தையில் நிறைந்தவனு கூலனும்

எந்தனுள் மகிழ்ந்து நானே எந்தையே துதிக்கலானேன்
கந்தநாதா இந்தவேளை வாருமே எந்தன்
சிந்தையுங் களிக்கவரந் தாருமே ஸ்வாமி

ஏழையான் சிறுபாலனுனை வேளைதோறு மறந்திடாவருள்
ஈஸ்வரா குகாகடம்ப வாசனே தேவ
இந்திரன் மகள் தெய்வானை நேசனே

சங்கரா சிவசிவாஎன் பங்குனி லிருந்தருள்செய்
சத்தியுமை பெற்றெடுத்த பாலனே எந்தன்
சித்தமதிலே குடிகொள் வேலனே ஸ்வாமி

சகலவரமரு ளறுமுகா திரு மகளொனுவினி லிருந் தருள்செயத்
தஞ்சமென்றே னுன்பதமென் நாளுமே சுகந்
தந்தெனக் குபதேசித்தே யாளுமே

சத்தியருள் பாலன் என்ற மெட்டு.

தேன்பொழியும் பழனி திருச்செந்தூர் தென்கழுகாலசவன்
மான்குறவள்ளியரை மணஞ்செய்ய வாரவிபரமிது
அண்டமுலாவிவரும் யாழ்வமுனிவ னஞ்சலென்றோடிவந்து
தொண்டர்க்கருள் புரியும் முருகனைத் தோத்திரஞ் செய்துரைப்பார்
வள்ளியழகதுபோல் பூலோகத்தும் வானிலுங் கண்டறியேன்
புள்ளிமயில்வேலா உனக்கவள் பொருத்தமாகுமென்றார்
நாடெங்குமேயுரையும் வீணையிசை நாரதர் சொற்கேட்டு
ஆடம்பரத்துடனே வேலாயுத ரானந்தங் கொண்டெழுந்தார்
தேசமெல்லாம் பணியும் சுப்பையா தேசிகவேல்முருகன்
வாசவன் மால்மருகன் தினைப்புன வள்ளிமேலாசைகொண்டு
வெள்ளிப்பிரம்பெடுத்தார் உத்ராக்ஷமும் வெண்ணீருந் தாணிந்து
கள்ளவில்மாலையுடன் பூங்காவனக் காடு நதிகடந்தார்

நாடிநடந்தாராம் வள்ளியெனும் நம்பிராஜன் மகளைத்
தேடித்திரிந்தாராம் மானீன்ற தெய்வக்குறவடிவை

காடுவனங்கடந்தும் வள்ளிதினைக் காடு சமீ பமில்லை
வாடிமெலிந்தவர்போல் வையாபுரி மாமலைச்சாரல்சென்றார்

வெள்ளிமலைகடந்து சுப்பையா விராலி மலைகடந்து
உள்ளமிகமயங்கி மலையடி யோரமே போகையிலே

கோலக்குழலழகி வள்ளிகவண் கொண்டே கிளிவிரட்டி
ஆலோலமென்றுரைக்க சுப்பிரமண்ய வேலனதையறிந்து

மானேமரகதமே அழகுள்ள வஞ்சியே ரஞ்சிதமே
கானக்குறமானே உனைநான் காணாமல் வாடினேனடி

என்றுரைகேட்டவுடன் வள்ளிபரணேகிப்பயந்தவளாய்
சென்றிடுந்தூரமென்றே மொழிந்திடச்சேவற்கொடியோனும்

பாடும் புலவோர்க்கு மனதினில் பக்தியருள் குமரன்
வேடுவரூபங்கொண்டு வருகிற வேடிக்கை பாருங்கடி

---

சந்தவரை வந்தகுக நாதா என்ற வர்ணமெட்டு.

காவதனில் மேவுகுற மாதைத் தேடித்
தாவிவழி கூடிவரும் போதே
வேடர்மாதே பரண்மீதே தினை
காத்திடுநல் வேளையிலப் போதே

ஆவலுடன் வள்ளிதனைக் கண்டு நீயார்
தேவலோகம் வாழ்பவளோ வென்று
மனம்விண்டு காதல்கொண்டு அந்த
அரிவையரி டந்தனிலே சென்று

அன்னமெனும் வள்ளிகுற மானே யுனக்
கென்னவிதி கானில்வரு வானேன்
ஐயோநானே மையலானேன் எனக்
காதரவு சொல்லடி செந் தேனே

என்னமொழி பேசுகிறாய் வேடா ராஜ
கன்னியென வேயறியா யோடா,
புத்திகேடா வாய்வீணேடா வேட
ரெங்தனைத்தேடி வருவார் போடா

எத்திசையு மெந்தனையே தேடி மனப்
பக்தியுடனேவருவார் கோடி
உன்னைநாடி விரைந்தோடி வந்தேன்
இத்தரணி யோர்மகிழ வாடி

புத்தியிலா வேடுவனே நீயே குறப்
பத்தினியாள் சேதியறி யாயே
மூடப்பேயே நீ கெட்டாயே வேடர்
பொல்லாதவர் கொல்வ ரறிவாயே

---

வன்னத்தினைமாவைத் தெள்ளி என்றமெட்டு.

சண்டாளப் பாதகி வள்ளி என்னை
அண்டார்களேயடி கள்ளி உன்னை
பெண்டாள வந்தவன் சொல்லி நானும்
சருவேசுரன் மருகோனென வறியார்களோ குறவேடுவர்
தானே அடி மானே (ச)

ஏதுக்கென்னேடிந்த வாது செய்யும்
சூதுக்கள்நீபோகில் லாது இந்தப்
பேதகவார்த்தை செல்லாது இப்போ
தெந்தாதியர் வந்தாலிது சந்தேகமு ணர்ந்தேசுவா
ரெட்டிப் போடா சுட்டி (ஏது)

சுட்டியென்றெனை வைத்தாயே குறக்
குட்டியே நீகெட்ட நாயே தர்லி
கட்டியேபின் வரு வாயே நீயும்
துடிகாரிநீயடிபாதகி பிடிவாதமோ டுரையேதென
தூசித் தாய்முன் னேசி (சுட்)

சிந்தைவருந்தியோர் தேகி யாகி
வந்தசுப்பிரமணிய ரேகி நல்ல
செட்டிபோல் வேசமு மாகி மகிழ்
சிவசண்முக னறுமாமுக னுருமாறிய வடிவேலர்
செல்வார் பின்னும் சொல்வார் (சி)

வானவர்புகழும் காசி என்ற மெட்டு.

வேறுசந்தம்.

செந்திலம் பதியில்வளர் கந்தன் மிசையந்தமொடு
சிந்துகவி இன்பமுறவே தாசன்சின்னத்
தம்பியுள மகிழ்ந்துகூறவே
சென்னல்விளைவுறு துன்னுமுத்தினங்கள் தன்னிலனுதினம்நண்ணுகணபதி
சேவடிதனைக் கொண்டாடினேன் சிறியேனிந்தக்
காவடிச்சிந்திசை பாடினேன்

விந்தைசேர் புனந்தனிலே சுந்தர வள்ளி தன்னிடம்
வேலவர்சொ ரூபமாற்றியே வளையற்செட்டி
போலவே தோள் பாரமேற்றியே மையல்
மீறிமன்மது தேறிவளைவிலை கூறிவள்ளிதன் னேரில்வருகிற
வேகமதைக் கண்டுபேசினுள் வளையல்தொடத்
தாகமதாய் விண்டுகூசினுள்

கோதிலாமாதரழைப்பக் காதினிற்கேளாதவர்போற்
குட்டிகள் கூவாதி ரேனென்றூர் வளையல்விற்கும்
செட்டியாரே கொண்டு வாவென்றூள் பெண்காள்
கோடிதிரவிய மாகுமிதுவிலை தேடியொருவரும் வாங்குவாரிலை
கொண்டுவந்தேனுங்களுக் கென்றூர் வள்ளியதனைக்
கண்டுளமகிழ்ந்துமே நின்றூள்

ஏதுகாண்வளையல்விலை கூறியதோ ருள்ளமொடு
ஏகமாய்ராமங்கள் சாத்தியே கம்பளியொரு
பாகமாய்த்தோளினி லேற்றியே செட்டி
இந்தவனமது கந்தநடைகள்நடந்துசுமையுடன் வந்திருக்கிறீ
ரெங்கிருந்துவந்தவர் நில்லும் சுமையிறக்கி
உங்கள்குல மூர்பேரைச் சொல்லும்

மங்கையே எனது மாமன் வெங்கடாசலஞ்செட்டியார்
வாரணஞ்செட்டியார் தம்பிகேள் எனதுபேரோ
காரணஞ்சண்முகஞ் செட்டிநான் இந்த
மானிலந்தன்னில் நீயிருக்கிற கானகந்தனை நாடிவந்தனன்
வள்ளியே வளையல் பாரடி எழில்மிகுந்த
கள்ளியே இதென்ன சீரடி

எங்கயோ இருந்துவந்த கொங்கணக் கோமுட்டியே நீ
எதுனக்கு வாக்கொழுப்போ வீண் வார்த்தைபேசாதே
எட்டியப்பால் தூரநில்லுங் காண் சும்மா

எறுமாறுகள் பேசிடாமலே கூறியேஉன் தந்தைதாய்பெய
ரெந்தனக்குளது சொல்வாயே அல்லதுபோனால்
வந்தவழியே நீ செல்வாயே

முக்கணன் எனது தந்தை சொக்கலிங்கஞ் செட்டிஎன்பார்
முன்னமேமலைய ரசனுல் பயின்றெடுத்த
கன்னிகை மீனுளுமென் தாயார் பச்சை

முத்துரத்தினம் வைத்தழுத்திய நத்துனக்கிது கொண்டுவந்தனன்
முன்கையில்வளையல் போடவே வள்ளியேயுனக்
கிங்கனங்கல்யாணங் கூடவே

எத்தனை சொன்னலு முந்தன் சித்தமும் கலங்கிடாமல்
மெத்தவுஞ்சாலங்கள் செய்தாயே வளையல்வேண்டாம்
பித்தனே அப்பாலே போவாயே நீயும்

என்னிடத்திலு ரைத்தசேதியெ னன்னைதந்தையர் தானறிந்திடி
லேகியே வந்துன்னை வெல்வரே பொல்லாதவேடர்
சாகவே வதைத்துக் கொல்வரே

பித்தனென்றுரைத்துத்தள்ளி மெத்தவுங் கேவலஞ்சொல்லிப்
புத்தியில்லாதவ னென்ருயே எனையிகழ்ந்து
சித்தமுங்கலங்கி நின்ருயே வேடப்

பெண்ணேகேள்குற மன்னர்வந்தெனை என்னசெய்குவ ரென்றுரைக்கவே
பேதையே அப்பாலேபோ வென்ருள் செட்டி நீ செய்யும்
சூதையுமறிவேனு னென்ருள் அப்போ

தெந்தவிதத்திலுமுந்தனைச்சிறை வந்துநானெடுத்தந்தமாச்செல்வே
னென்றுமேவனத்தி லோடினர் வள்ளியைத்தேடி
வந்துமேவேடுவர் கூடினர் கந்தன்

ஏகியேமர மாகியேகிளி யாகியேதினைக் காவனந்தனில்
எங்குமேநிழல் கொடுத் ததுவே கிள்ளைகளதில்
தங்கியேகளிப்படைந் ததுவே

## மதுரைவீரன் கோலாட்டப்பாட்டு வர்ணமெட்டு.

வேடர்களுக்குப்பயந் தோடி யொளிந்தவர்போல்
வேங்கைமரமாகவே தான்முளைத்தார்

மாடப்புருவுங்குயில் சோடிசோடியாயதில்
வந்துகளிப்படைந்த தென்சொல்லுவேன்

பூங்காவனத்திருந்த வேங்கைமரத்தைக்கண்டு
புனவேடர் வேங்கைமர மேதெனவே

ஆங்காரக்கோபங்கொள்ள வேங்கைமரமெதிரே
ஆறுமுகவர் போலத் தோன்றிடவே

ஏதென்றறியோமண்ணு நூதனமானமரம்
இங்கேஉண்டானதின்று தானெனவே

பேதகமாகமர மேதோமுளைத்ததிங்கே
தீதறவே எனத்தான் ஓதிநின்றாள்

கந்தன்குகன்கடம்பன் வந்தேநமதுகுடி
காத்திருக்கின்றாரெங்கள் தந்தையரே

எந்தநேரமுமுந்தன் சிந்தைதனில்நினைந்து
கந்தசாமிக்குப்பூஜை போடுமென்றார்

அண்டர்துயரகற்றி மண்டலங்காக்கவந்த
ஆறுமுகவன்மறு வேஷங்கொண்டு

தண்டுகமண்டலமுங் கோலும்பிரம்புடனே
தள்ளாடியே நரைத்த கிழவனைப்போல்

குண்டுமலையைவிட்டுப் பண்டாரம்போலவரும்
கோலத்தையறியாத மாதுவள்ளி

கண்டுகளிப்படைந்து கண்டுமொழியுரைத்துப்
பண்டாரமேநீ ரிங்கே வாருமென்றாள்

எந்தவூர் எந்ததேசம் பண்டாரக்கிழவனாரே
எங்கிருந்திங்குவந்தீ ரென்றுரைக்க

செந்தூர்குடியிருப்பு கந்தபண்டாரமென்பேர்
தேடியுனதிடத்தை நாடிவந்தேன்

ஏதுக்கடாகிழவா என்னைநீதேடிவந்தாய்
எட்டியப்பாலேபோடா மட்டியென்றாள்

சூதுகபடமில்லை ஏதுமறியேனம்மா
சோறுகறிஎனக்கு வேணுமென்றார்

தானிருந்திட்டபரண் மீதிலிருந்துவள்ளி
கானகத்திற் பண்டாரக் கிழவனுக்கு

தேனெடுத்துத்தினை மாவிடித்துவள்ளி
தேக்கிலையைக்கிள்ளித் தொன்னைதைத்து

பாகுபதத்துடனே மாவெடுத்துவந்து
பண்டாரக்கிழவனுக்குத் தான்கொடுத்தாள்

வேகத்துடனேதினை மாவைப்புசித்தவுடன்
விக்கிப்புனலெனக்கு வேணுமென்றார்

சன்னாசியாரேகேணி முன்னாலிருக்குதகில்
தண்ணீர்குடித்துவாரு மென்றுரைத்தாள்

தன்னாலேபோகமாட்டேன் என்நாவுளருதடி
சன்னாசிஉன்னாலேநான் சாவேனென்றார்

இந்தவிதிக்குநா னென்னசெய்வேனென்றவரை
இழுத்துச்சென்றேயடுத்த குளத்தில்விட்டாள்

வந்தவினையகற்றுங் கந்தனுங்கேணிதனில்
விந்தையுடன் விழுந்து புலம்பலுற்றார்

காலவிதியோ என்ன கோலஞ்சமைத்தாயென்று
கையைப்பிடித்திழுத்துக் கரையில்விட்டாள்

வாலக்கிளியேவள்ளி கோலக்குழலழகி
வாடிநாமிருபேரும் கூடவென்றார்

போடாகிழவாதினைக் காடுதனையகன்று
பொல்லாதவேடர்வந்தால் தொல்லையென்றாள்

ஆடம்பரத்துடனே வேலன்சினந்தெழுந்து
அண்ணன் கணபதியைத் தானினைந்தார்

தம்பிமுருகன்மன தன்புடனேநினைக்கத்
தும்பிமுகன்கரிபோல் வேஷங்கொண்டார்

வெம்பிமிகச்சினந்து நம்பிராஜன்மகளை
வேகத்துடனே யங்கு விரட்டிவந்தார்

ஆரணியத்திலந்த வாரணந்தான்விரட்ட
ஐயோநா னென்னசெய்வேன் பாவியென்றாள்

காரணக்கள்ளிஎனைச் சேருவேனென் றுவலக்
கைகொடுத்தால்தானுனைக் காப்பேனென்றார்

அய்யாகிழவனாரே மெய்யான கந்தசாமி
ஆறுமுகவன்போலே தோணுதென்று

ஒய்யாரமானவள்ளி கையைப்பிடித்தேசத்யம்
உந்தனுக்கேயான்பாரி யாவேனென்றாள்

கானகந்தனிலந்த மானைச்சிறையெடுத்த
கந்தன்கழுகுமலை தானடைந்தார்

வானோரிடுக்கறிந்து மானிலங்காக்கவந்த
வையாபுரிக்குமரன் தாள்துணையே

பாதிமதி சூடுமேரன் பாலா என்ற மெட்டு.

வேறு சந்தம்.

மேதினியில் மானுடராய்ப் பிறந்தோர்
ஞானம் சிறந்தோர் பாவந்துறந்தோர் மோட்ச
மேலாம் பதிவியறங் கறந்தோர் மூன்பு
மின்னொளிக்கிடையிலொரு பொன்னொளிமுன் தாரமென
விரித்தேன் இன்சொ · லுரைத்தேன்

சோதிடம் பண்டித நூல்கற் றோரும்
கவிவல்லோரும் புவிலில்பாரும் அரணைத்
தொழுதுவணங்கு பெரியோரும் சிறுவன்
சொல்லிய காவடிச்சிந்தில் நல்லிசை இராவிடினும்
துதிப்பார் ஏற்று மதிப்பார்

சின்னஞ்சிறு வயதி லுனைநானே
முருகோனே தினந்தானே மனதில்
சிந்தனைசெய் தேயருள்பெற் றேனே இன்னும்
தேடியே காவடிச்சிந்து பாடியேகொண் டாடுகிறேன்
தேவா எனைக் காவா

மின்னுமலை யுற்றபெரு மானே
உனை நானே பணிந்தேனே பதம்
வேண்டியே தொழுதேன்மிகத் தானே இந்த
மேதினிக் கருள்புரியுஞ் சோதியேயென் மீதுமன
மிலையா வரவுந் துலையா

பண்டுமறைதேடுகின்ற பாதா
செல்வநீதா கந்தநாதா தேவ
பத்தினிதெய் வானையின் சமேதா கலை
பரமனருள் சுதனே அமரர் சிறைவிடுத்த
பரனே பன்னிரண்டு கரனே

குண்டுமலைக் குள்ளிருக்கு மாண்டி
பழநியாண்டி உனைவேண்டி உலகிற்
கோடான கோடிபரத் தாண்டி உன்னைக்
கும்பிட்டநினைத்தவர்க்குத் தென்புடன்வரமளிக்கும்
குருவே கல்விக் கருவே

புள்ளிமயி லேறிடுமொய் யாரா
அதிகாரா மகாதீரா அண்டர்
புகழும்படி யார்களுப காரா நல்ல
புத்தியை மிகத்தருவா யத்திமுக னுக்கிளைய
பூமா கதிர் காமா

வள்ளியைச்சிறையெடுத்த தினத்தில்
பாரவனத்தில் தினைப்புனத்தில் அவள்
தெள்ளியமா வள்ளியுண்ட க்ஷணத்தில் வேடர்
மங்கையைச் சிறையெடுத்த சங்கரனருள் சுதனே
வாரும் கிருபை தாரும்

கந்தாகடம்பணியுந் தோளா
நெடுநாளா செவியுங் கேளா திருந்து
கல்மனங்கொண் டாயேவடி வேலா அந்தக்
காவினில் தினையிடித்த மாவினைக்கையா லெடுத்த
கரனே பரா பரனே

வந்தேயெனைக் காக்கமன மிலேயா
பாரமிலேயா தூரந்திலேயா ஸ்வாமி
செந்தாமரைவதனச் சிலேயா கந்தா
மாயகிருஷ்ணன் மருகா நேயமுற் றெனைரட்சிக்க
வாவா எனைக் காவா

## வேறு.

திருக்கொன்றை தரிக்குஞ்செஞ் சடைச்சங்க ரனுக்கன்பு
சேயனே சம்பிர தாயனே எழில்

திகழ்பொற்கர வயில்வெற்பொடு மகிமைக்கடல் கவர்விட்டிடு
தீரனே மாம யூரனே

தருக்குந்தென் கழுகுக்குன்றத் திருக்குஞ்சண் முகக்கந்த
சாமியே குண நேமியே புகழ்

சரஹணத்தடமிசையுதித்திடு விரைவுதட்சண ரைவதைத்திடு
தாமனே கதிர் காமனே

மணக்குந்தண் டமிழ்க்கும்ப முனிக்கன்பு பெறச்செய்யும்
மாரனே யுப காரனே

மதமிகுத்தெழு கயமுகக்கண பதிதனக்கிளைய யவனெனச்சொலும்
மைந்தனே திருக்கந்தனே

பனைக்குங்குங் குமக்கொங்கை தினைக்குஞ்சங் கரர்க்கும்பொற்
பங்கனே யள கங்கனே வேலா

பருகிமெய்ச்சிறை யரிகள்மொய்த்திடு நறுமலர்த்தொடை மருவுமற்றிய
பாரனே யுப காரனே

விளக்குஞ் செந்தமிழ்க்கும்ப முனிக்கன்பு தருஞ்சத்தி
வேலனே யநு கூலனே வந்து

வீறுக்கோக்குறு வேயெடுத்திடு சூரனைச்சிர மேதுணித்திடு
மெய்யனே முரு கையனே

திளைங்கும் கயனைப்பண்டு கிளைக்கும் படியேகொன்ற
சித்தனே பரி சுத்தனே ஸ்வாமி

தேசுமுற்றவுல் லாசவற்புத வாசவற்குப தேசம்வைத்தருள்
சேந்தனே வள்ளி காந்தனே

வானவர்புகழும் காசி என்ற மெட்டு.

நாளும்புனுகுபன்னீ ரோடுங்கமழுஉயர்
நானிலம் புகழவார தாரய்யா நானிலம்
நன்கிலுயுர்ந்தப ரங்கிரிநாமகி ழுங்கழுகாசல முந்தனில்மேவிய
நாயக ரென்பவரிவர் தான்பெண்ணே நாயகர்

வானவர்களுந்துதிசெய் மாமுனிவரும்பணிய
மாமயிலின் மீதுவார தாரய்யா மாமயி
வண்டிசைகண்டுதிரண்டுகருங்குழல் மங்கையர்கண்டு மருண்டுதினைப்புன
வள்ளிகணவ ரிவர்தான் பெண்ணே வள்ளி

பன்னிருகரந்தனிலு மின்னியவெண்ணீருடனே
சொர்னமய மாகவார தாரய்யா சொர்ன
பக்தர்கணித்தம் நினைத்து மனத்தில் வழுத்தியபொற்கயி லைப்பதிமேவிய
பரமபுதல்வரிவர்தான் பெண்ணே பரம

பொன்னின் பிரம்புடனே என்னெதிர் ஜனங்கள் பல
தன்னிலேவணங்கவார தாரய்யா தன்னிலே
பொதிகைமலைக்குரு முனிவர்தமக்குயர் தமிழைமனத்தினிலுருகவழுத்திய
புங்கவரென்பரிவர் தான் பெண்ணே புங்க

வேறு.

சீரகம் பெருங்காயம் வெந்தயம் கடுகு மஞ்சள்
செழிப்பாய் மனங்களிப்பாப் விற்கும்
செட்டியாரே கொத்தமல்லி மிளகாயோ டோமமது
சீராய் அதுவும் நேராய்
ஈருள்ளி வெங்காய வெல்லஞ் சீருடன் கருப்புக்கட்டி
இருக்கா சொல்லும் சுருக்கா ஐயா
இந்தக்கடைதனிலே வெந்தயம் கோரோசனையும்
இலையா அதுவும் மலையா
சாரமரிதார மக்கராவுங் கிராம்புரசம்
தயவாய் அதுவும் நயமாய் நல்ல
ஜாதிலிங்கம் பூரமொடு நோய்தனக் கொல்லாமருந்தும்
தாரும் கொண்டு வாரும்
பாருவைக்கிசைந்த கந்தன் காவடி கொண்டாடியிங்கே
படித்தோம் பக்தி தொடுத்தோம்
பாக்குவெற்றிலை லவுங்கம் போயிலை கிராம்புமேவும்
புதமாய்க் கொடும் இதமாய்.

அற்புத நூதனக் காவடிச்சிந்து.
முற்றிற்று.

பூவணம் **N. K. S.**

வேலுச்சாமிக் கவிராய ரவர்கள்,

இயற்றிய

# சண்முகானந்த பக்திரஸ கீர்த்தனம்.

**நண்பர்களே! கவனியுங்கள்! கவனியுங்கள்!**

பாவாணர்போற்றும் பூவணம் வேலுச்சாமிக் கவிராயரவர்களால் கால நாகரிகத்திற் கேற்றவாறு புற்பல அற்புத வர்ணமெட்டுகளா லியற்றிய இக்கீர்த்தனப் பிரபந்தத்துள்.

பரங்கிரி வேலவன்மீதுபாடியுள்ள பஞ்சாமிர்த, பாலாபிஷேகப்பாடல் படிக்குந் தோறும் பஞ்சாமிர்தச் சுவைபோலவே இருக்கும்.

கார்த்திகேயக் கந்தன் மீதுள்ள தோத்திரப் பாடல்கள் படிக்கப்படிக் கச் சீர்த்தியாயும், மனப்பூர்த்தியாயு மிருக்கும்.

கழுகாசலக் குமரன்மீதும் திருக்கழுக் குன்ற முருகன் மீதும் பாடி யுள்ள ஒரடிச்சந்தப் பாடல்கள் உள்ள மகிழ்ச்சியை உடனே உண்டாக்கும்.

“தொனிக் கிணங்கு சங்கீதம், பாலஷண்முகனே, திருப்பார்வதி மகனே” என்ற வண்ணச் சந்தக் கீதங்கள் கேட்குந்தோறும் எண்ணுந் தோறும் கிளர்ச்சியை உண்டாக்கும்.

“செந்தாழந்தேன்” என்ற பாடலும் அதன் சந்தத்தொனியும் தாளத் தொனியும் மனதுக்கோர் சிலப் பதவியைத் தரும்.

இன்னும் அடங்கியுள்ள மற்ற அருமையான பாடல்கள் படிப்பவர்க் கும், கேட்பவர்க்கும் சதா ஆனந்தத்தை உண்டாக்குமென்பதில் ஐயமில்லை

விலை அணா—4.

---

திருவாலவாய் க்ஷேத்திரத்தைச்சேர்ந்த

ஐயங்கோட்டை ஸ்ரீமான்

## M. C. அருணாசலக் கோவலரவர்கள்

இயற்றிய

ஸ்ரீ ஹரிபக்த

# துருவ சரிதம்.

பக்தி நிலையை உறுதிப்படுத்திப் பகவானது திவ்விய மங்கள பாத பங்கயத்தில் அன்பு செலுத்துமாறு படிப்பார் மனதைப் பக்குவப்படுத்த வல்ல ஓர் உத்தம சரித்திர நூல்.

விலை அணா 0—6.

## படிக்கவும் கேட்கவும் இன்பம்தரும் பாடல்கள்.

முத்தமிழ் க்ஷேத்திர மதுர

## பாஸ்கரதாஸ் அவர்களியற்றிய

| | | |
|---|---|---|
| இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம் 1, 2 பாகங்கள் | விலை அணா | 0—6—0 |
| புதிய பெரிய பக்திரஸ கீர்த்தனங்கள் | ,, | 0—5—0 |
| ஷை இரண்டாம் பாகம் | ,, | 0—5—0 |
| லலிதாங்கி சரித்திரம் ஷை யாரியற்றியது | ,, | 0—6—0 |
| வள்ளியம்மை சரித்திரம் ஷை | ,, | 0—6—0 |
| அதிரூப அமராவதி ஷை | ,, | 0—6—0 |
| சகுந்தலா 1, 2 பாகங்கள் ஷை | ,, | 0—6—0 |

செந்தமிழ்ச் சரபம் வீரகாஹூர்

மகா-௱-௱-ஸ்ரீ சுப்பையாபிள்ளை அவர்களியற்றிய.

| | | | |
|---|---|---|---|
| கோவலன் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| நல்லதங்காள் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| அரிச்சந்திரன் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| பதிவிரதா சத்தியவான் சாவித்திரித் திருப்புகழ் | 0 | 2 | 0 |
| இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| இலங்காதகனத்திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| ஞானசௌந்தரி சரித்திரம் 1, 2 பாகம் | 0 | 4 | 0 |
| அல்லியரசாணி சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| பாண்டவாள் சரித்திரப் பாரதக்காவடிச்சிந்து திருப்புகழ் | 0 | 2 | 0 |
| [illegible]ரமன் திருமால்மருகன் பக்திரஸக் கீர்த்தனை | 0 | 2 | 0 |

க. துரைசாமி படையாச்சியார் அவர்களியற்றிய

| | | | |
|---|---|---|---|
| சப்தகாண்டம் இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 3 | 0 |
| பார்வதி சத்தியவான் சாவித்திரி சரித்திரத் திருப்புகழ் | 0 | 2 | 0 |
| [illegible]ள்ளி சுயம்வரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |

மகா-௱-௱-ஸ்ரீ உடையார்பிள்ளையவர்களியற்றிய

| | | | |
|---|---|---|---|
| [illegible]காவலன் சரித்திரம் 1, 2 பாகங்கள் | 0 | 4 | 0 |
| [illegible]அல்லியரசாணி சரித்திரம் 1, 2 பாகங்கள் | 0 | 4 | 0 |
| [illegible]சௌ சௌ என்னும் 5 டிராமாச் சரித்திரங்கள் விலை | 0 | 6 | 0 |

**இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,**
புக்ஷாப், ஸ்ரீ கோபால் மஹால், வடக்குச்சித்திரை வீதி,
மதுரை.